## சுருக்கம்

பழங்குடியினர் மேம்பாடு – 2015–2016–ஆம் ஆண்டிற்கான மாநில திட்டத்தில் பழங்குடியினர் மேம்பாட்டு திட்டப் பகுதிகளில் – பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் சிறுபாசனத் திட்டத்தில் பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை வட்டம் மலையாளப்பட்டி கிராமத்தில் ரூ.4.95 இலட்சம் செலவில் தெளிப்பு நீர் பாசனம் அமைப்பதற்கு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகின்றது.

---

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ப.மே1(2)) துறை

அரசாணை (ப) எண்.50 நாள் 29.02.2016

மன்மத வருடம் மாசி 17
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்கப்பட்டது

பழங்குடியினர் நல இயக்குனரின் கடித எண். பமே/அ2/799/2013, நாள் 22.01.2016.

*************

ஆணை :-

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பழங்குடியினர் நல இயக்குநர் அவர்கள் 2015–2016–ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் (ITDP areas), பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் தெளிப்பு நீர்பாசன வசதி திட்டத்தினை செயல்படுத்துவதற்காக ரூ.4.95 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது என்று தெரிவித்து, பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை வட்டம் மலையாளப்பட்டி கிராமத்தில் வேளாண்மை மற்றும் சிறுதானிய பயிர் வகைகளுக்கு தெளிப்பு நீர் பாசன வசதி அமைக்க ஐந்து நபர்களுக்கு நிதி அனுமதி ஆணையைக் கோரி முன்மொழிவுகள் அனுப்பியுள்ளார்.

**2.** மேலும் இத்திட்டத்திற்கு முன்மொழிவுகள் பெரம்பலூர் வேளாண்மை பொறியாளர் துறை செயற்பாறியாளர் மூலமாக அனுப்பப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட தொகையினை வேளாண்மைத்துறை செயற்பொறியாளர் பெறுவதற்கு ஒப்பளிப்பு வழங்க ஆணை வெளியிடுமாறு கோரியிருந்தார்.

**3.** பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை வட்டம் மலையாளப்பட்டி கிராமத்தில் வேளாண்மை மற்றும் சிறுதானிய பயிர் வகைகளுக்கு தெளிப்பு நீர்பாசன வசதி அமைப்பதற்காக ஐந்து பழங்குடியின விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.4.95 இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சத்து தொன்னூற்று ஐந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்– 02 பழங்குடியினர் நலன் – 796 - பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் -II - மாநில திட்டம் – JE - பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் சிறு பாசனத் திட்டங்கள் -17 - சிறு பணிகள்
(கு.தொ.கு. 2225 02 796 JE 1706) "

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவிற்கான நிதி 2015–2016 ஆம் ஆண்டு இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினத்தை மேற்கொள்ள பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பழங்குடியினர் நல இயக்குநர் பெற்று பெரம்பலூர் வேளாண்மை பொறியியல் செயற்பொறியாளருக்கு வழங்க அனுமதி அளிக்கப்படுகிறது.

7. மேற்கண்ட திட்ட செயலாக்கத்தினை கண்காணிக்கவும், திட்டத்தை சுணக்கமின்றி நிறைவேற்றி பயனீட்டுச் சான்றிதழை பெரம்பலூர் வேளாண்மை பொறியியல் செயற்பொறியாளரிடமிருந்து பெற்று அரசுக்கு உரிய காலத்திற்குள் அனுப்பி வைக்கவும் பழங்குடியினர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.9950/ஆதி (ம) ப.ந/2016–1, நாள் 26.02.2016 –ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

ப. அண்ணாமலை,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை, சென்னை –5.
மாவட்ட ஆட்சியர், பெரம்பலூர் மாவட்டம்.
செயற்பொறியாளர், வேளாண்மை துறை, பெரம்பலூர்.
மாநில கணக்காய்வுத் தலைவர்,சென்னை – 6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 9.
நகல்:-
நிதி (ஆதி(ம) ப.ந.) துறை, சென்னை – 9.
திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை, சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர்
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர்
அவர்களின் தனிச் செயலர், சென்னை – 9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந5/கமபா)துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

4/4

ஜோ. தங்கம்
29.2.16
பிரிவு அலுவலர்.